

நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று முன்தினம் (23.04.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக நகராட்சி நிர்வாக இயக்குநரகம், பேரூராட்சிகளின் இயக்குநரகம் ஆகியவற்றில் தெரிவு செய்யப்பட்ட 8 இளநிலை உதவியாளர்கள், 4 தட்டச்சர்கள் மற்றும் 1 சுருக்கெழுத்து தட்டச்சர் என மொத்தம் 13 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வின் போது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், நகராட்சி நிர்வாக இயக்குநர் எஸ். சிவராசு, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.



சென்னை, கிண்டி நெடுஞ்சாலைத்துறை ஆராய்ச்சி நிலைய பயிற்சி மைய வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அய்யன் திருவள்ளுவர் சிலையினை, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு திறந்து வைத்தும் – உதவிப் பொறியாளர்கள் மற்றும் நேரடி உதவியாளர்களின் புதுமுகப் பயிற்சி வகுப்பு தொடக்கி வைத்து விழா பேருரையாற்றினார். இந்த விழாவில், நெடுஞ்சாலைகள் (ம) சிறுதுறைமுகங்கள் துறை அரசுச் செயலாளர் மரு. இரா.செல்வராஜ், தமிழ்நாடு சாலை மேம்பாட்டு திட்டம்| திட்ட இயக்குநர் தெ.பாஸ்கர பாண்டியன், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் இயக்குநர் மு.சரவணன், இணை இயக்குநர் அ.வேங்கடாசலம், முதன்மை இயக்குநர் இரா.செல்வதுரை, சிறப்பு அலுவலர் (தொழில்நுட்பம்) இரா.சந்திரசேகர், இணை இயக்குநர் திருமதி.ப.லதா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

யாருக்கு என்ன பொறுப்புகள் கொடுத்தால் சிறப்பாகச் செய்வார்கள் என்பதை உணர்ந்து அதற்கேற்ப

# பொறுப்புகளையும் பதவிகளையும் முதல்வர் ஒப்படைத்திருக்கிறார்!

## நெடுஞ்சாலைத் துறையில் புதிதாக பணியமர்த்தப்பட்ட பொறியாளர்களுக்கு பயிற்சி வகுப்புகளை தொடங்கி வைத்து அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!

சென்னை, ஏப். 25 -

சென்னை, கிண்டி நெடுஞ்சாலைத்துறை ஆராய்ச்சி நிலைய பயிற்சி மைய வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அய்யன் திருவள்ளுவர் சிலையினை, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு திறந்து வைத்தும் - புதியதாக பணி அமர்த்தப்பட்ட உதவிப் பொறியாளர்கள் மற்றும் நேரடி உதவியாளர்களின் புதுமுகப் பயிற்சிகள் வகுப்பைத் தொடக்கி வைத்து விழா பேருரையாற்றினார்.

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று (23.04.2025) மாலை, சென்னை, கிண்டி நெடுஞ்சாலை ஆராய்ச்சி பயிற்சி நிலைய வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அய்யன் திருவள்ளுவர் சிலையினை திறந்து வைத்தும், புதியதாக பணியமர்த்தப்பட்ட உதவிப் பொறியாளர்கள் மற்றும் நேரடி உதவியாளர்களின் புதுமுகப் பயிற்சி வகுப்பு தொடக்க விழாவினை தொடங்கி வைத்து பேசிய தாவது :-

இன்றைய விழா முப்பெரும் விழா, அய்யன் வள்ளுவரின் சிலை திறப்பு விழா, புதுமுகப் பயிற்சி வகுப்புகளின் துவக்க விழா, உலக புத்தகத் திருவிழா, அந்த வகையில் உலக புத்தக தினமான நேற்று புத்தகத்தின் அடையாளமாக இருக்கக்கூடிய திருவள்ளுவரின் சிலையை நெடுஞ்சாலைத்துறை சார்பாக இன்று திறந்து வைத்தார்கள்.

புத்தகத்தை படிக்கும் போது, தலை குனிந்து படிக்கின்றோம். ஆனால், புத்தகத்தைப் படித்தப் பின்பு, நாம் தலைநிமிர்ந்து நடக்கின்றோம். புத்தகம் சிறந்த நண்பன், சிறந்த ஆசிரியர், அதனால்தான், வாழ்க்கையில் நாம் படித்துக் கொண்டிருக்கிறோம். வாழ்வின் இலக்கணம் திருக்குறளில் தான் இருக்கிறது. திருக்குறளில் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என முப்பால்கள் இருக்கிறது. வாழ்வின் அறநெறியை கற்பது தொடர்பாக அறத்துப்பாலில் விளக்கப்பட்டி ருக்கிறது.

ஒரு மனிதன் தனக்கு தேவையான பொருட்களை சேர்ப்பது குறித்து, பொருட்பால் விளக்குகிறது, இல்லற வாழ்க்கை குறித்த இன்பத்துப்பால் விளக்கு கிறது. ஒரு திருக்குறளை முழுமையாக நாம் படித்துவிட்டோம் என்று சொன்னால், அதன்படி நடந்தால், வாழ்வின் வெற்றிப் பாதையை நாம் அடைய முடியும் என்று தெரிவித்தார்கள்.

பொதுவாக இஸ்லாமியர்கள் குர்ஆனைப் பற்றி பெருமையாக பேசுவார்கள். கிறிஸ்தவர்கள் பைபிளை பற்றி பெருமையாக பேசுவார்கள். இந்துக்கள் கீதையை பற்றி பெருமையாக பேசுவார்கள். ஆனால், மனிதனாக பிறந்த ஒவ்வொருவரும் தனி மனித வாழ்வியலைப் பற்றி பேச வேண்டும் என்றால், “திருக்குறளை“ பற்றிதான் பேச வேண்டும். மீண்டும் ஒருமுறை பெருமையாக சொல்கிறேன்.

எனக்கு நெருக்கமான திருவள்ளுவர் சிலையை திறந்து வைக்க வாய்ப்பு கொடுத்த நெடுஞ்சாலைத் துறையை சேர்ந்த அனைவருக்கும் எனது நெஞ்சம் நிறைந்த நன்றியை தெரிவித்தார்கள்.

**பெண்ணுரிமைக்காக போராடி குரல் கொடுத்தவர்!**

பயிற்சிக்கு வந்திருக்கிற உதவியாளர்கள் 166 பேரில், 85 பேர் பெண்கள். உதவிப் பொறியாளர்கள் 48 பேரில், 20 பேர் பெண்கள். ஏறக்குறைய பாதிப் பணியாளர்கள் பெண்கள். இது போன்ற நிலை 50 ஆண்டுகளுக்கு முன்னால் இல்லை. இந்தப் பேருதவியைச் செய்தவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் .

1989இல் முத்தமிழறிஞர் கலைஞர் மூன்றாவது முறையாக முதல்வராகப் பொறுப்பேற்றவுடன் அனைத்து அரசுப் பணிகளிலும் 30 விழுக்காடு பெண்களுக்கு ஒதுக்கீடு செய்து, ஆணை வழங்கினார். அதன் காரணமாகத்தான் ஏறக்குறைய பாதிப் பெண்கள் அனைத்து அரசுப் பணிகளிலும் இடம் பெற முடிகிறது என்றும், தந்தை பெரியார் சமூக புரட்சியில் ஈடுபட்டவர். சமூகத்தில் உள்ள பிரச்சனைகளை சரி செய்து, பெண்களுக்கு சம உரிமையை பெற்றுத்தர அயராத உழைத்தவர். பெண்ணுரிமைக்காக தன்னையே அர்ப்பணித்து பணியாற்றி யவர். பல மாநாடுகளில் பெண்ணுரிமைக்காக போராடி குரல் கொடுத்தவர்.

“தலைவாரிப் பூச்சூடி உன்னைப் பாடசாலைக் குப் போ

என்று சொன்னாள் உன் அன்னை.

சிலை போல ஏன் அங்கு நின்றாய்?

மலைவாழை அல்லவோ கல்வி!

நீ வாயார உண்ணுவாய் போ என் புதல்வி!”

• என பாரதிதாசனும் பாடியுள்ளார்.

**உயர் பதவியில் அதிகமாக பெண்களாகவே உள்ளனர்!**

தற்பொழுது, நான் எந்த அரசு கூட்டத்திற்கு சென்றாலும், அங்கு உயரிய பதவியில் அதிகமாக பெண்களாகவே இருக்கின்றனர். அனைத்து துறைகளிலும் பெண்கள் இருக்கின்றனர். எந்தப் பெண்கள் அடிமைப்பட்டிருந்தார்களோ, அதே பெண்கள் இன்று ஆளுமைகளின் அடையாளமாக திகழ்கிறார்கள்.

“இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து

அதனை அவன்கண் விடல்“

என ஒரு குறள் உள்ளது, யாருக்கு என்ன பதவி கொடுத்தால், அதை சிறப்பாக செய்வார்கள் என்பதை உணர்ந்த நம் முதலமைச்சர் அதற்கேற்றவாறு அவரவருக்கு பொறுப்புகளையும் பதவிகளையும் ஒப்படைத்தி ருக்கிறார் என்று எடுத்துரைத்தார்.

**பக்தி இலக்கியங்கள் பற்றி மணிக்கணக்கில் பேசுவேன்!**

அதேபோல, இன்று பயிற்சிக்கு வந்துள்ள அனைவரும் தங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள பொறுப்புகளை உணர்ந்து சிறப்பாக பணியாற்ற வேண்டும். நான் ஆன்மீகத்தை பெரிதும் கடைப்பிடிப்பவன் அல்ல. இருப்பினும் பக்தி இலக்கியங்கள் பற்றி மணிக்கணக்கில் பேசுவேன். காரணம், நான் படிப்பதால்தான், நான் ஓய்வு நேரங்களிலும் பயண நேரங்களிலும் அதிகம் படித்துக் கொண்டிருக்கின்றேன். அதனால்தான், என் துறை சார்ந்து தெரிந்து வைத்துக் கொள்கிறேன்.

ஆகவே, நீங்களும் நேரம் கிடைக்கும் போதெல்லாம் படியுங்கள். என்னுடைய நெடுஞ்சாலைத்துறை மானியக் கோரிக்கையில், நான் ஒரு மணி நேரத்திற்கு மேலாக பேசியபோது, முதலமைச்சர் முழுமையாக கேட்டார். காரணம் அதில் அவ்வளவு குறிப்புகள் உள்ளன. அதனால் நேரம் கிடைக்கும்போதெல்லாம் அதிகம் படிக்க வேண்டும்.

எனது பள்ளி காலத்திலேயே, நாங்கள் இந்தி படிக்காத காரணத்தினால், எங்கள் ஆசிரியர் எங்களுக்கு தண்டனைகளை வழங்குவார். நாங்களும் இந்தியை கற்க மாட்டோம் என விடாப்பிடியாக நிற்போம். அதற்குக் காரணம் எங்களுக்கு இந்தி மீது உள்ள வெறுப்பு அல்ல. “எங்கள் தாய்மொழி தமிழின் மீது உள்ள பற்று“.

“இருந்தமிழே உன்னால் இருந்தேன்: இமையோர் விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்” என்றார் தமிழ்விடு தூது ஆசிரியர்.

அதேபோல “தமிழுக்கும் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் அமுதென்று பேர்: அந்தத் உயிருக்கு நேர்” என்றார் பாவேந்தர் பாரதிதாசன்.

நம்மை நம் வாழ்க்கையில் முன்னேறச் செய்வது, தமிழ்மொழி மட்டுமே. ஆகவே, உங்களுக்கெல்லாம் நான் சொல்லிக்கொள்ள இருப்பது ஒன்றே ஒன்று தான், “தாய்மொழியாம் தமிழை மறக்காதீர்கள்“ .

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு உரையின் போது கேட்டுக் கொண்டார்.

இந்த விழாவில், நெடுஞ்சாலைகள் (ம) சிறுதுறை முகங்கள் துறை அரசுச் செயலாளர் மரு. இரா. செல்வ ராஜ். தமிழ்நாடு சாலை மேம்பாட்டு திட்டம்II திட்ட இயக்குநர் தெ.பாஸ்கர பாண்டியன் .நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் இயக்குநர் மு.சரவணன், இணை இயக்குநர் அ. வேங்கடாசலம், முதன்மை இயக்குநர் இரா. செல்வதுரை, சிறப்பு அலுவலர் (தொழில்நுட்பம்) இரா.சந்திரசேகர், இணை இயக்குநர் திருமதி.ப.லதா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



ஜம்மு – காஷ்மீர் மாநிலத்தில் நடந்த தீவிரவாத தாக்குதலில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில் புதுதில்லி தமிழ்நாடு இல்லத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள உதவி எண்கள் கட்டுப்பாட்டு அறையை நேற்று முன்தினம் (23.04.2025) தமிழ்நாடு அரசின் புதுதில்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், தமிழ்நாடு அரசின் உள்ளுறை ஆணையாளர் ஆஷிஷ் குமார் ஆகியோர் ஆய்வு செய்து, கட்டுப்பாட்டு அறைக்கு வரும் அழைப்புகள் மற்றும் கோரிக்கைகளுக்கு உரிய அறிவுரைகள் மற்றும் உதவிகள் வழங்கும் பணிகள் குறித்து கேட்டறிந்தனர்.




# தி.மு.க. இளைஞர் அணி

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

### இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி

### ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், இளைஞர் அணி மாவட்ட–மாநகர–மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி கீழ்காணும் சட்டமன்றத் தொகுதிகளில், ஒன்றிய அரசைக் கண்டித்து, மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது. அதன் விவரம் வருமாறு:

| நாள் | கழக மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 26.04.2025 | கடலூர் கிழக்கு | சிதம்பரம் | பரங்கிப்பேட்டை | நாஞ்சில் சம்பத், க.செல்வமணி |
| 27.04.2025 | கடலூர் கிழக்கு | காட்டுமன்னார்கோயில் | திருமுட்டம் | வழக்கறிஞர் ராஜீவ் காந்தி, க.தமிழ்மணி |

### ஒன்றிய–நகர–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

தேனி வடக்கு மாவட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 25.04.2025 வெள்ளிக்கிழமை | மாலை 5.00 மணி | தேனி வடக்கு | ஏ.பி.எம். ஓட்டல் அண்ட் ரிசார்ட்ஸ், குமுளி தேசிய நெடுஞ்சாலை, பழனிச்செட்டிப்பட்டி, தேனி. |

### சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி!

பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 9–க்கு உட்பட்ட விளாத்திக்குளம் சட்டமன்றத் தொகுதியில் சமூக வலைத்தளப் பயிற்சி நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 26.04.2025 சனிக்கிழமை | மாலை 5.00 மணி | 9 | விளாத்திக்குளம் | ஜி.வி. மஹால், விளாத்திக்குளம் |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 23-04-2025

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி